மற்றும் பருப்பு கடைசல் அல்லது குருமா 3 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம், ஏழை, எளிய, நடுத்தர மக்கள் விலைவாசி உயர்விலிருந்து ஓரளவு பாதுகாக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) சூரிய மின்சக்தி பம்புசெட்டுகளை விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் வகையிலும், விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கும் வகையிலும், பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.*

தமிழ்நாடு நீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலம் என்பதால், பாசனத்திற்கு இப்பொழுது கிடைக்கும் நீரினை வீணாக்காமல், சிக்கனமாகப் பயன்படுத்தி, பயிரிடும் பரப்பினை அதிகரித்து, அதிக மகசூல் பெறுவது அவசியம் என்பதைக் கருத்தில்கொண்டு, சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் முதலான நுண்ணீர்ப் பாசன அமைப்புகளை சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியத்திலும், இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழக அரசு வழங்கி இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதிகரித்து வரும் மின்சாரத் தேவையைக் கருத்தில் கொண்டு, சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்புசெட்டுகளை மானியத்தில் வழங்கும் திட்டத்தை எனது தலைமையிலான அரசு முதன்முதலாக சென்ற ஆண்டு அறிவித்தது. இதனைச் செயல்படுத்தும் வகையில், டெல்டா மாவட்டங்களில் 500 சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்புசெட்டுகளை 80 விழுக்காடு மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கும் பணிகள் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின்மூலம் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த பம்புசெட்டுகள் விரைவில் வழங்கப்படும்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 மே 15

தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த, பாசன நீர் மற்றும் எரிசக்தித் தேவையைப் பூர்த்தி செய்வது அவசியம் என்பதைக் கருத்தில்கொண்டு, மின்சாரத்திற்கான தேவை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வருகின்ற இந்தச் சூழ்நிலையில், வேளாண் பாசனத்திற்கு ஒரு சிறந்த மற்றும் நிரந்தரத் தீர்வு காணும் வகையில், சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளை விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கவும், அதனுடன் நுண்ணீர்ப் பாசன அமைப்புகளை இணைத்தும் ஒரு புதிய திட்டத்தைச் செயல்படுத்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2013-2014 ஆம் நிதியாண்டில், வேளாண்மைத் துறைமூலம் விவசாயிகளுக்குக் குழாய்க் கிணறு, ஆழ்குழாய்க் கிணறு, திறந்தவெளிக் கிணறு மற்றும் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து நீரை இறைக்க ஏதுவாக, 80 விழுக்காடு மானியத்துடன்கூடிய, 5 குதிரைத் திறன் கொண்ட சூரிய சக்தியால் இயங்கும், சூரிய ஒளியினை முழுமையாகத் தொடர்ந்து பெற ஏதுவாக, நகரும் வகையில், Solar Tracking வகையில் அமையும் சூரிய தகடு பயன்படுத்தப்படும். 2,000 ஏ.சி. பம்புசெட்டு அமைப்புகளை வழங்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், தற்போதுள்ள நுண்ணீர்ப் பாசன அமைப்புகளை நடைமுறையில் உள்ள நெறிமுறைகள் மற்றும் பயிர்களுக்கு ஏற்ற முதன்மைத் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றுடன் ஒருங்கிணைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு அமைப்பிற்கான செலவு தோராயமாக 5 இலட்சம் ரூபாய் ஆகும். இதில் அரசு மானியம் 80 விழுக்காடு, அதாவது 4 இலட்சம் ரூபாய் ஆகும். விவசாயியின் பங்களிப்பு 20 விழுக்காடு, அதாவது ஒரு இலட்சம் ரூபாய் ஆகும். இதற்கென அரசுக்கு 100 கோடி ரூபாய் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளின் பங்களிப்பான 20 விழுக்காடு தொகையை விவசாயிகள் நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு ஏதுவாக, தேவைப்படும் விவசாயிகளுக்கு நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு கூட்டுறவு வங்கிக் கடன் வசதி பெறவும் ஏற்பாடு செய்து தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2013 மே 15] [செல்வி ஜெ ஜெயலலிதா]

முற்பகல் 10-25

இத்திட்டம், விவசாயிகளுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு உகந்த சூரிய சக்தியினைப் பயன்படுத்திடவும், நுண்ணீர்ப் பாசனம்மூலம் பாசன நீரை சிக்கனமாகப் பயன்படுத்திடவும், வேளாண் பயிர்களில் உயரிய சாகுபடி முறைகள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் பசுமைக் குடில் மற்றும் நிழல் வலை முறையில் சாகுபடி போன்ற பல்வேறு நவீனத் தொழில்நுட்பங்களுடன் உயர் மகசூல் ரகங்களையும் பயன்படுத்தி, அதன்மூலம் உற்பத்தியினை அதிகரித்து, விவசாயிகளின் வருமானத்தினை உயர்த்திடவும் இத்திட்டம் வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(உ) வீரத் தாய் குயிலி, ஹைதர் அலி, திப்பு சுல்தான், சுவாமி சகஜானந்தாவிற்கு நினைவுச் சின்னங்கள் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட சுதந்திரப் போராட்ட வீரர்களையும், ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக குரல்கொடுத்து தங்கள் இன்னுயிரை ஈந்த தியாகிகளையும், சமுதாய மேம்பாட்டிற்காகப் பாடுபட்டவர்களையும் போற்றிப் பெருமைப்படுத்தும் அரும்பணியை எனது தலைமையிலான அரசு மேற்கொண்டு வருகிறது.*

அந்த வகையில், கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், சுயமரியாதை சுடரொளி ஜீவரத்தினம், தியாகி சங்கரலிங்கனார், வீரபாண்டிய கட்டபொம்மன், மனு நீதிச் சோழன் ஆகியோருக்கு மணிமண்டபங்களை அமைக்கவும், தீரன் சின்னமலை, வீரமங்கை வேலு நாச்சியார் ஆகியோருக்கு நினைவுச் சின்னங்கள் அமைக்கவும், தியாகி சிதம்பரநாதன், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி ஆகியோருக்குத் திருவுருவச் சிலைகள் எழுப்பவும் ஆணையிட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

நேற்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய சட்டமன்ற உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள், வீரமங்கை வேலு நாச்சியாரின் படைத் தளபதியாய் விளங்கி தன் உயிரை